களில் மக்களுக்கு ஆர்வம் ஏற்படச் செய்து, அதை வந்து பார்ப்பதற்கும், மாண்புமிகு உறுப்பினர் திரு. கிட்டப்பாவைப் போன்றவர்கள் முயற்சி எடுத்து, தங்களுடைய கருத்தை மக்கள் மத்தியிலே பரப்பினால், அது உதவியாக இருக்கும். என்றாலும், கண்டிப்பாக தஞ்சை மாவட்டத்திலே அது நடத்தப்படும் என்பதை நான் உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா; தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அதற்கு முன்னாலே அவரது பேரவைச் செயலர் அவர்களும், முதலீடு மிக அதிகமாகச் செய்திருந்தும் கூட அதிலிருந்து மிகவும் குறைவாக வருமானம் கிடைத்தது என்பதை இங்கே குறிப்பிட்டார்கள். அதற்கு முக்கியமானகாரணம் என்னைப் போன்றவர்கள் எண்ணுவது, அதிகமான விளம்பரம்-மிக அதிகமாக இல்லாவிட்டாலும்—தேவையான விளம்பரம் இந்த ஒலி-ஒளிக் காட்சிக்கு இல்லாதது என்பதுதான். இதை நாங்கள் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். அதை ஆராய்ந்து, அரசு செயல்பட முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்; மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, விளம்பரம்தேவையான அளவிற்குச் செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. கிட்டப்பா அவர்களே, அதைப் பார்த்தார்களா என்பது எனக்குச் சந்தேகம். அவர்கள் அதைத் தெரிவித்தால், எப்படி பக்கத்திலே இருப்பவர்கள் பார்க்கவில்லையென்பதும், வெளியிலே இருக்கிற பொது மக்கள் எப்படி அதைத் தேடிவந்து பார்ப்பார்கள் என்பதையும் நாம் விளங்கிக் கொள்ள முடியும். என்றாலும் மாண்புமிகு உறுப்பினருடைய கருத்து அரசின் பரிசீலனையில் நிச்சயமாக எடுத்துக் கொள்ளப்படும். தேவையான அளவு விளம்பரங்களில் கவனம் செலுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

•

விருதுநகரில் உள்ள A.F.C.M. நீதிமன்றம்

* வினா எண் 9— திரு. மு. சுந்தரராஜன்: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) விருதுநகரில் உள்ள A.F.C.M. கோர்ட்டை வேறு இடத்திற்கு மாற்றும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்த அடிப்படையில் மாற்ற எண்ணியுள்ளது?

திரு. எம். ஏ. ஜெயவேலு; (அமைச்சரின் பேரவைச் செயலர்):

(அ) தற்பொழுது அப்படிப்பட்ட திட்டம் எதுவும் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

Buildings of Metropolitan Magistrates Courts at Madras.

* Q. No. 10—Thiru R. E. CHANDRAN JEYAPAL: Will the Hon. the Minister for Law, be pleased to state whether the Government have any proposal for providing more spacious court halls for the sitting and holding of court by the Metropolitan Magistrates at Egmore, George Town and Saidapet?

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்): தற்பொழுது எழும்பூரிலுள்ள பெருநகர் மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றத்திற்குக் கூடுதல் கட்டிடம் கட்டுவது குறித்த செயற் குறிப்பு ஒன்றிறு அரசின் பரிசீலனையில் உள்ளது. ஆனால் ஜார்ஜ் டவுன் மற்றும் சைதாப்பேட்டை பெருநகர் மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றங்களுக்குக் கூடுதல் கட்டிடம் கட்டுவதற்கான எந்தச் செயற்குறிப்பும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. ரா. எ. சந்திரன் ஜெயபால்: பேரவைத் . தலைவர் அவர்களே, எழும்பூரிலே உள்ள மாநகர நடுவர் நீதி மன்றத்திலே கூடுதலான கட்டிடங்கள் கட்டப்படும் என்று அமைச்சரின் செயலர் அவர்கள் அறிவித்தார்கள். அப்படி அமைக்கின்றபொழுது அங்கே வழக்கறிஞர்களுக்கு நல்ல அறைகள் அமைக்கப்படுமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

திரு. எம்.ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்): வழக்கறிஞர் அங்கே தங்குவதற்கும், இடம்கொடுப்ப தற்காக, அந்தத் திட்டத்திலே இடம் ஒதுக்கப்பட வேண்டுமென்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையினால், அங்கே கட்டிடம் கட்டும்போது, வழக்கறிஞர்களுக்கும் இடம் ஒதுக்கப்படும்.

திரு. அ. செல்வராசன்: ஜார்ஜ் டவுன் கோர்ட் எனது தொகுதியைச் சேர்ந்ததாகும். எந்தக் காலத்தில் அந்தக் கோர்ட்டைக் கட்டினார்களோ தெரியாது, இப்பொழுது பல்லாயிரக்கணக்கான வழக்குகள் அங்கே செல்கின்றன. அதுவும் மதுவிலக்கு சம்பந்தமான வழக்குகள் அங்கே அதிகம் இருக் கின்றன. அங்கே பெண்கள் மிகவும் அவதிப்படுகின்றனர். ஆகவே, பெரிய இடமாக, வேறு இடத்திலாவது கட்டிடம் கட்ட அரசு முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.